©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 324A] சென்னை, திங்கட்கிழமை, செப்டம்பர் 12, 2011
ஆவணி 26, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**2011–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2011.**

**2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம் 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 19/2009.

நீக்கம்.

**2.** 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

**நோக்க – காரண விளக்கவுரை**

வேளாண்மைத் தொழிலை முறைப்படுத்துவதற்கும் வேளாண்மை மன்றத்தை அமைப்பதற்கும் வேளாண்மை அல்லது தோட்டக்கலையில் தகுதிப்பாடு பெற்றுள்ள நபர்களின் பதிவேட்டினைப் பேணி வருவதற்கும் மற்றும் அதனோடு தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கென 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 19/2009) இயற்றப்பட்டது. ஆனால் விவசாயிகளின் பிரதிநிதிகளும், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களும் மேற்சொன்ன சட்டத்திற்கு எதிராகத் தமது கருத்துக்களை விரிவாகப் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற உறுப்பினர்களால் மட்டுமே இயற்கையான விவசாயம் குறித்து ஆலோசனைகள் எதுவும் வழங்க முடியும். மேற்சொன்ன சட்டமானது பாரம்பரிய வேளாண் அறிவு கொண்ட மக்கள் அதுபற்றி விவசாயிகளிடம் பகிர்ந்துகொள்வதையும் மற்றும் அரசு சாரா தன்னார்வ அமைப்புகள் வேளாண் நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்குவதை தடைசெய்யும் விதமாக உள்ளது. வேளாண்மைச் சமூகத்தினரிடையே வேளாண் பாரம்பரிய அறிவைப் பகிர்ந்துக் கொள்ளுதல் மற்றும் விதைகள் மீதான வேளாண்மை மக்களின் உரிமையை மேற்காணும் சட்டமானது அனுமதிக்கவில்லை. மருத்துவத்தில் அல்லது சட்டத்தில் தகுதிபெற்ற நபர்களைப் பொறுத்த நேர்வில், உள்ளதைப் போன்று நமது மாநிலத்தில் வேளாண்மையில் அல்லது தோட்டக்கலையில் தகுதிப்பெற்ற நபர்கள் வேளாண்மை செய்வதில்லை; மற்றும் வேளாண்மைப் பணிகளை மேற்கொள்வதில்லை. பாரம்பரிய விவசாயிகள் மட்டுமே வேளாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எனவே விவசாயிகள் அவர்களது வேளாண்மை அறிவினைத் தம்மிடையே பகிர்ந்துகொள்வதென்பது இயற்கையான ஒன்று. மேற்காணும் சட்டமானது விவசாயிகளின் இவ்வாறான நடவடிக்கைகளைத் தடைசெய்கிறது. இச்சட்டமானது வேளாண்மைத் தகுதிப்பாடு கொண்டிராத விவசாயிகளை அல்லது மேற்காணும் மன்றத்திலுள்ள அவர்தம் பிரதிநிதிகளை உள்ளடக்காது. இறுதியில் மேற்காணும் சட்டமானது இயற்கை வழியிலான சாகுபடி, வேளாண் சமூகத்தினரின் சுதந்திரம் ஆகியவற்றைத் தடுக்கிறது; மற்றும் வேளாண்மை பற்றிய படிப்பானது, தனிப்பட்ட தொழில் முனைவர்களின் கரங்களில் தவழ்கிறது.

**2.** எனவே, 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 19/2009) நீக்கம் செய்வது தேவையானது எனக் கருதப்பட்டுள்ளது. அரசானது இந்நோக்கத்திற்காகச் சட்டமொன்றை இயற்றுவதென முடிவு செய்துள்ளது.

**3.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.ஏ. செங்கோட்டையன்,**
*வேளாண்மைத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.